பண்டித ஜவஹர்லால் நேரு வேளாண் கல்லூரி மற்றும் ஆராய்ச்சி நிலையம்,
காரைக்கால் & இந்திய வானிலைத்துறை

# காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

(26.04.2025 முதல் 30.04.2025 வரை)

தொ. எண் (அலுவலகம்): 04368 – 261182
E-mail: agronaas2012@gmail.com தொ. நகல் (அலுவலகம்): 04368-261260

அறிக்கை எண்: 033 (04) PJN/GKMS/2025 தேதி: 25.04.2025

## காரைக்கால் மாவட்ட வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை

| கடந்த வார வானிலை (20.04.2025 முதல் 24.04.2025 வரை) | | | | | வானிலை காரணிகள் | அடுத்த ஐந்து நாட்களுக்கான வானிலை முன்னறிவிப்பு -30.04.2025 – 8.30 மணி நேரம் வரை | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 20/04 | 21/04 | 22/04 | 23/04 | 24/04 | | நாள்-1 26/04 | நாள்-2 27/04 | நாள்-3 28/04 | நாள்-4 29/04 | நாள்-5 30/04 |
| 0 | 0 | 0 | 0 | 0 | மழை (மி.மீ) | 8 | 2 | 8 | 10 | 8 |
| 38 | 37 | 37 | 37 | 37 | அதிகபட்ச வெப்பநிலை (டி.செ) | 35 | 34 | 34 | 33 | 32 |
| 28 | 27 | 26 | 26 | 28 | குறைந்தபட்ச வெப்பநிலை (டி.செ) | 28 | 27 | 26 | 26 | 25 |
| 2 | 2 | 2 | 1 | 3 | மேக மூட்டம் | 6 | 7 | 7 | 5 | 6 |
| 61-89 | 69-88 | 67-92 | 61-85 | 62-89 | ஈரப்பதம் (%) | 50-80 | 50-80 | 50-80 | 50-80 | 50-80 |
| 4 | 4 | 3 | 4 | 4 | காற்றின் வேகம் (கி.மீ) | 26 | 24 | 20 | 18 | 14 |
| தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | தெற்கு தென் மேற்கு | மேற்கு வட மேற்கு | தென் கிழக்கு | காற்றின் திசை | வட கிழக்கு | வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு | கிழக்கு வட கிழக்கு |

### எதிர்பார்க்கப்படும் வானிலை (26.04.2025 முதல் 30.04.2025 வரை):

அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

அடுத்த சில நாட்களுக்கு வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். வெப்பநிலை 25-35 டி.செ, மாலை மற்றும் காலை நேர காற்றின் ஈரப்பதம் 50-80 சதவிகிதமாகவும், காற்றின் வேகம் 14-26 கி.மீ அளவுக்கு பதிவாக வாய்ப்புள்ளது. காற்றானது பெரும்பாலும் கிழக்கு வட கிழக்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

ஏப்ரல் 30 லிருந்து மே 06 வரை மழை (2.4 மி.மீ) இயல்பை விட அதிகமாகவும், அதிகபட்ச வெப்பநிலை (34.8 டி.செ) மற்றும் குறைந்தபட்ச வெப்பநிலை (24.9 டி.செ) இயல்பாகவும் இருப்பதற்கு வாய்ப்புள்ளது.

## வேளாண் அறிவுரை

| பயிர்கள் / கால் நடைகள் | பருவம்/ விவரங்கள் | வேளாண் ஆலோசனைகள் |
|---|---|---|
| பருத்தி | பயிர் வளர்ச்சி பருவம் | காரைக்கால் மாவட்டம் பகுதிகளில் கடந்த சில தினங்களாக நிலவிய வானிலையானது பருத்தியில் சாறு உருஞ்சும் பூச்சிகளான இலைப்பேன் மற்றும் அசுவினி பூச்சுகளினால் தாக்குதல் ஏற்பட வாய்ப்புள்ளது. எனவே, இப்பூச்சிகளின் தாக்குதல் தென்பட்டால் சாறு உருஞ்சும் பூச்சிகளை கட்டுபடுத்த ஹெக்டருக்கு இமிடாக்லோபிரைட் 17.8 SL 100 மி.லி. அல்லது அசாடிராக்டின் 0.03% (300 ppm) 2500 மிலி தெளிக்கவும். |
| | | பருத்தியில் இரகங்களுக்கு 15 வது கனுவிலும், ஒட்டு செடிகளுக்கு 20 |

| | | |
|---|---|---|
| | | வது கனுவிலும் நுனி கிள்ளுவதன் மூலம் மகசூலை அதிகரிக்கலாம் |
| கால் நடை | வெப்ப அயற்சி | தற்பொழுது நிலவும் அதிக வெப்பம் காரணமாக கால்நடைகளில் வெப்ப அயர்ச்சி நோய், இளஞ்சிவப்பு கண் நோய் மற்றும் வெப்ப மடிவீக்கம் நோய் தாக்க வாய்ப்புள்ளது. எனவே, கால்நடைகளை கோடை வெப்பத்திலிருந்து பாதுக்காக்க கீழ்வரும் வழிமுறைகளை பின்பற்றலாம்.<br>கால்நடை கொட்டைகளின் மேற்பரப்பில் வைக்கோல், உலர்ந்த புற்கள், பனை ஓலைகள், தென்னை ஓலைகள் அல்லது தென்னை நார்க்கழிவுகளை பரப்பி அதன் மீது தண்ணீர் தெளிப்பதன் மூலம் வெப்பத் தாக்கத்திலிருந்து கால்நடைகளை பாதுகாக்கலாம்.<br>கால்நடைகளை காலை 06 மணி முதல் 10 மணி வரையிலும் மாலை 04 முதல் 06 மணி வரையிலும் மேய்ச்சலுக்கு அனுப்பலாம்.<br>கால்நடைகளுக்கான குடிநீர் தொட்டிகளின்மேல் சூரிய வெப்பம் தாக்காவண்ணம் கூரை அமைத்து கால்நடைகளுக்கு குளிர்ந்த குடிநீரை அளிக்க வேண்டும்.<br>கால்நடைகளை தினமும் இருவேளை குளிப்பாட்ட வேண்டும்.<br>கால்நடைகள் அதிகமாக தண்ணீர் பருகுதல், வேகமாக மூச்சு விடுதல், அதிகமாக உமிழ்நீர் வடிதல், பசியின்மை, நடுக்கம் மற்றும் கீழே விழுதல் போன்ற வெப்ப அயற்சிக்கன அறிகுறிகள் தென்பட்டால் அருகில் உள்ள கால்நடை மருத்துவமனையில் சிகிச்சை அளிக்க வேண்டும். |

**குறுஞ்செய்தி:** அடுத்த ஐந்து நாட்களுக்கு லேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது.

**முதல்வர்**